பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

★ தமிழர்க்கு சுயாட்சி; பௌத்த அமைப்புகள் போர்க்கொடி

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 11 இதழ் 110
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25 - 5 - 1995

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு தீர்வாக தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு பல பௌத்த அமைப்புக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் இளைஞர் பௌத்த சங்கம் உட்பட பல பௌத்த அமைப்புகள் இணைந்து தமிழருக்கு சுயாட்சி வழங்குவதற்கு தாங்கள் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளன.

மேற்படி அறிக்கை நேற்று ஜனாதிபதியிடம் பௌத்த அமைப்பைச் சேர்ந்தவர்களால் நேரடியாக கையளிக்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

★ ஏவுகணைக்கு அஞ்சி

## திருமலை செல்வதற்கு விசாரணைக்குழு மறுப்பு!

(கொழும்பு)

திருமலை துறைமுகத்தில் விடுதலைப் புலிகளால தகர்க்கப்பட்ட ரணசுறு, சூரியா கப்பல்கள் குறித்த விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட மூன்ளுள் நீதியரசர் ஐ. இஸ்மயில் தலைமையிலான விசாரணைக் குழு திருமலை செல்ல மறுத்து வருவதாக ''சண்டே ஐலண்ட்'' தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தம்வசமுள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் தாம் செல்லும் விமானத்தை சுட்டு வீழ்த்திவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவே இவர்கள்

[6-ம் பக்கம் பார்க்க]

படையினரின் உடனடி தேவைக்காக

# ரூ. 300 கோடியை மேலதிகமாக

# அரசு போருக்கு ஒதுக்குகிறது!

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு மேலும் முந்நூறுகோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிடமிருந்து பெருமளவு இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காகவே இந்த நிதி ஒதுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தினர். அம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இராணுவச் செலவுகளுக்கு தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி போதாதுள்ளது. நவீன இராணுவ சாதனங்களை புதிதாக வாங்குவதற்கு மேலும் 300 கோடி ரூபா தேவைப்படுகிறது.

பொ ச ஐ அரசின் முதலாவது வரவு செலவு திட்டத்தில் யுத்தச் செலவை 300 கோடி ரூபாவினல் குறைக்க

(5ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில்

## அதிகாரி உட்பட இரு பொலிஸார் பலி

[ ட்டுநகர்]

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட இரு விசேட அதிரடிப் படையினர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது

கல்முனையிலிருந்து மட்டக்களப்பை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்வண்டி ஒன்றில் ஐந்துக்கு மேற்பட்ட விசேட அதிரடிப் படையினர் பயணம் செய்தனர். இந்த பஸ் வண்டியை விடுதலைப் புலிகள் தாளங்குடாப்பகுதியில் வழிமறித்து தாக்குதல் மேற்கொண்டதில் இதில் பயணம் செய்த விசேட அதிரடிப்படை இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட இரு பொலிசார் பலியானதுடன மூன்று பொலிசார் படுகாயமடைந்தனர்.

விசி

★ அலரிமாளிகையில் பொருத்தப்பட்ட

## ஏவுகணையை படம்பிடிக்கச் சென்ற இரு பத்திரிகையாளர்கள் கைது!

[கொழும்பு]

அலரி மாளிகையில் தற்போது பூட்டப்பட்டிருக்கும் நவீன ஏவுகணையை படம் பிடிப்பதற்காகச் சென்ற இரு பத்திரிகையாளர்கள் நேற்று பொலிசாரினல் கைது செய்யப்பட்டனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: 'ஹிரு' சிங்கள பத்திரிகையின் செய்தியா

(6-ம் பக்கம் பார்க்க)

வட கிழக்கு புனரமைப்புக்கு

## இலங்கைக்கு உதவ பிரிட்டிஷ் அரசு மறுப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில மீண்டும் மோதல்கள் ஏற்பட்டதையிட்டு பிரிட்டிஷ் அரசு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கு

[5-ம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம் காடையர் கொடூரம் மூதூரில் 7 தமிழர் வெட்டிக்கொலை

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில், ஏழு தமிழ் பொதுமக்களை முஸ்லிம் காடையர் வெட்டிப் படுகொலை செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் மூதூர் பகுதியில் தமிழர் வாழும் குடியிருப்புக்குள் திடீரென புகுந்த முஸ்ம் காடையர்களே மூர்க்கத்தனமாக தமிழர்களை வெட்டிப் படுகொலை செய்ததாகவும் இதில் ஏழு தமிழர் இறந்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டபோதிலும் மேலும் பல

(5ம் பக்கம் பார்க்க)

இன்று யாழ். முற்றவெளியில்

## நீருந்து விசைப்படகு விமானஎதிர்ப்பு ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

''பூநகரி கூட்டுப்படைத் தளம் மீதான தாக்குதலில் சிறிலங்கா கடற்படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட அதிவேக நீருந்து விசைப்படகும், விமான எதிர்ப்பு ஆயுதங்களும் இன்று யாழ்.முற்றவெளியில் காட்சிக்கு வைக்கப்

(6ம் பக்கம் பார்க்க)

வட-கிழக்கு ஆஸ்பத்திரிகளுக்கு

## மருந்துகள் அனுப்ப அரசு புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகளை எடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் புதிய நடைமுறை ஒன்றை அமுலுக்கு கொண்டுவந்துள்ளது.

இத்த புதிய நடைமுறையின்படி அரசாங்கம் கொழும்பில் 'மருந்துச் சபை' ஒன்றை அரம்பித்தள்ளது. இதன் பிரகாரம் வட-கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகள் மருந்துவகை

[5ம் பக்கம் பார்க்க]

## மட்டுநகரில் மூன்று தமிழ் பெண்கள் படையினரின் சூட்டுக்கு பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாளங்குடா பகுதியில் நேற்று மூன்று தமிழ் பெண்களை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஸ் ஒன்றில் வந்த 3 தமிழ் பெண்களே இவ்வாறு சுட்டுக் கொலைசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் பின் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக சம்பவத்தில் காயமடைந்தோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் கடந்த சில தினங்களாக படையினர் பொது மக்கள் மீது நடாத்திவரும் கொடூரத் தாக்குதல்களால் பொதுமக்கள் வீடுகளைவிட்டு வெளியேறாது வீடுகளுக்குள்ளே முடங்கியுள்ளனர். மட்டுநகர்ப் பகுதி வெறிச்சோடிப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[5-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### நீரிறைக்கும் பம்பு தேவை

2 மீற்றர் உயரத்துக்கு நீரிறைக்கக்கூடிய 3'' விட்ட பம்புகள் தேவை, வாடகைக்கு அல்லது விலைக்கு வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். உப்பு உற்பத்தி நிறுவனம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தாவடி. (ஏ-4939)

### தேவை

Honda (E. G. K) 650 (L கான்டில் Made in Japan) இக்னேசன் கொயில் தேவை, தொடர்பு கொள்ளவும்: ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (எ-4942)

## ஓட்டோ விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைவீதி பாண்டியன்தாழ்வில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஓட்டோ வாகன விபத்தொன்றில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

ஏ. பற்றீசன் (வயது 20) குருநகர். கே. சிங்கராசா (வயது-30) ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். —170-ரி

## இன்று

[கொழும்புத்துறை

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று 25ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 515 மணிக்கு பூர்வபக்கம் ஏகாதசி விஷேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். 154

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-05-25

வியாழன் இரவு

8-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
8-10 சித்த மருத்துவ குறிப்புகள்
8-20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''சிறைப் பறவையின் நினைவலைகள்'' குறுநாடகம்
8-30 செய்திகள்
8-40 தாயகப் பாடல்கள்
8-50 எங்களின் தேசம்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-05-26

வெள்ளி காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 மணியாரம்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 தாயகப் பாடல்கள்

1995-05-25

வியாழன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 இசையும் கதையும்
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 பொன்விளையும்பூமி
6-15 விளையாட்டுச் செய்திகள்
6 20 கேள்வி-பதில் விளையாட்டுத் தொடர்பானவை
6-30 டீலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## கால்நடைத் தீனிகள் தாராளமாய் உள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தில் கால்நடை தீனி தாராளமாக இருப்பதாக சமாச தலைவர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

சமாசத்தின் களஞ்சியத்தில் கால்நடைதீனி தாராளமாக உள்ளதாகவும், 'கோமாரி' கப்பலிலும் கால்நடைதீனி போதியளவு சமாசத்துககு வந்து சேர்ந்துள்ளதாகவும் கால்நடை தீனி தேவைபடுவோர் சமாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். 170-சி

## அகதிமுகாம் குடிசைகள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தோர் அகதி முகாம்களில் அவசிய புனரமைப்பு வேலைகளையும் திருத்த வேலைகளையும் மேற்கொள்வதற்காக நாலரை இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த நிதியைக் கொண்டு இப்பிரிவிலுள்ள அகதிமுகாம்களில் மிகவும் பாதிப்புற்ற மழை காலங்களில் ஒழுக்கு இருக்கும் நிலையிலுள்ள குடிசைகள் கிடுகளினால் புதிதாக வேயப்படவுள்ளதாகவும் இக்குடிசைகளின் பழுதடைந்த மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்கள் சிலாகைகள் இணைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பெய்த பெருமழையின்போது பல்வேறு முகாம்களிலுள்ள குடிசைகளில் நீர் ஒழுக்கினால் மக்கள் மிகுந்த சிரமப்பட்டது குறிப்பிடத்தக்கது. 72-ரி

## காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போனஸ் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம், தம்முடன் காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கு வழங்கும் இலாபப் பணம் போனஸ்) வழங்குவதை அதிகரித்துள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்துடன் காப்புறுதித் திட்டங்களான 5, 14, 29 ஆகிய காப்புறுதித் திட்டங்களின் கீழ் காப்புறுதி செய்து கொண்டவர்களுக்குத் தாம் வழங்கிவரும் வருடாந்த லாபப் பங்கு வழங்குவதை அதிகரித்துள்ளது.

இதன்படி இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்ட அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் 100 ரூபா வீதம் இலாபப் பங்கீடாக வழங்குவதற்கு அது தீர்மானித்துள்ளது. ஒரு லட்சம் ரூபாவுக்குக் காப்புறுதி செய்த ஒருவருக்கு, இத்திட்டத்தின் கீழ் இலாபப் பங்கீடாக ஒரு வருடத்திற்கு 10,000 ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 162 ரி

## யாழ். ரக மண்வெட்டி விநியோகிக்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி, விற்பனவு, நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். விவசாயிகளுக்குத் தேவையான யாழ்ப்பாண ரக மண்வெட்டிகளைக் கொழும்பிலிருந்து பெற்று விநியோகிப்பதற்கு முன்வந்துள்ளது.

இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த யாழ். ரக மண்வெட்டி ஒன்றன் முன்னைய விலை 375 ரூபா என்றும், தற்போதைய விலை 850 ரூபா என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மண்வெட்டி தேவைப்படும் விவசாயிகள் இதற்கான முற்பணத்தை, தத்தமது பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் செலுத்திப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுகிறது.

போதுமானளவு விவசாயிகள் தங்கள்பெயர்களைப் பதிவு செய்து, முற்பணத்தைச் செலுத்தும் பட்சத்திலேயே இந்த மண்வெட்டிகளைக் கொழும்பிலிருந்து கொள்முதல் செய்து இங்கு கொண்டுவரமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 72

## ஜெனறேற்றர்களுக்கு ஐம்பது பரல் டீசல் பெறுவதற்கு நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். பிராந்தியச் சுகாதாரப் பணிமனையிலுள்ள 14 அரசினர் வைத்தியசாலைகளுக்கும் வந்து சேர்ந்த ஜெனரேற்றர்களை இயக்குவதற்கான 50பரல் டீசலை கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வடபகுதி அரசினர் வைத்தியசாலைகளின் நோயாளர்கள் எவ்வித பாதிப்புமின்றிச் சிகிச்சை பெறும் வகையில், 14 ஜெனரேற்றர்கள் கடந்த வருடம் கொழும்பிலிருந்து பெறப்பட்டன. ஆனால் பல மாதகாலமாகியும் இவற்றை இயக்குவதற்கான டீசல் இல்லாமையால், பிரதிமாகாணப் பணிப்பாளர் கொழும்பு சென்று சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு 50 பரல் டீசலை இங்கு கொண்டு வருவதற்கு முன்பு அனுமதி வழங்கியிருந்தும் தற்பொழுது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மீண்டும் டீசலைக் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவருவதற்கு யாழ்.அரச அதிபரின் உதவியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 160

## செப்ரிசீமியாவுக்கு இளம் பெண்பலி

(யாழ்ப்பாணம்)

இரண்டு நாட்காய்ச்சல் என யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 20 வயது இளம் பெண் செப்ரிசீமியா நோயின் தாக்கத்திற்குள்ளாகி நேற்று முன்தினம் மரணமானார்.

மூளாயைச் சேர்ந்த சமதகினி கிருஷ்ண (20வயது) என்ற இளம் பெண்ணே மரணமானவராவர், 90-ரி

## பழுதடைந்தநிலையில்முகாம் குடியிருப்பு

[யாழ்ப்பாணம்]

இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் பெரும்பாலான குடிசைகள் பெரிதும் பழுதடைந்திருப்பதாக இடம் பெயர்ந்த சேவக மக்கள் நலன் காக்கும் சழகத்தினர் தெரிவித்தனர்.

மழை பெய்ததால் குடிசைகள் ஒழுக்குகள் ஏற்படும் அளவுக்கு உள்ளன.

இதனால் மக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பெய்த மழையினால் பெரும்பாலான குடிசைகள் மழை ஒழுக்கிற்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது. 170 ரி

## குடிநீர் விநியோகம் துஷ்பிரயோகமாகிது

[யாழ்ப்பாணம்]

யாழ் நகர்ப் பகுதிகளில் குழாய்கள் மூலம் யாழ் மாநகராட்சிசபையால் விநியோகிக்கப்பட்டு வரும் நன்னீரை பாவனையாளர்கள் துஷ்பிரயோகம் செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது,

யாழ். நகர்ப்பகுதியில் குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நன்னீரை பொது மக்கள் அனுவசியதேவைகளுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். நீர்க்குழாய்களுக்கருகில் வைத்து துணிவகைகளைகழுவுவது வீட்டு முற்றங்களில் நாட்டப்பட்டிருக்கும பூஞ் செடிகளுக்கு இதன் மூலம். நீர் ஊற்றுவது போன்ற அனுவசியமானசெயல்களைப் பொது மக்கள் செய்து வருகிறார்கள்

அதுமட்டுமல்லாது சில சமயங்களில் நீர் குழாய்களைத் திறந்து பாவித்து விட்டுதிருப்ப அதைப் பூட்டாது அப்படியே விட்டுச் செல்வதால் இக்குழாய்களில் இருந்து நன்னீர் வீணாக வெளியேறுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. 162-சி

## கட்டுடையில் ஆரம்ப சுகாதார நிலையம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கட்டுடை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரமாண அடிப்படையிலான வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதற்கு 90 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்திருந்தார்.

கட்டுடை சனசமுக நிலையத்திற்கு பக்கத்திலுள்ள காணியில் நிறுவப்பட்டுள்ள இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான திரு. து. வைத்திலிங்கம் சம்பிரதாயப்படி திறந்து வைத்தார். மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என். விவேகானந்தன் இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். -72

## கராச்சியில் வன்முறை 23 பேர் உயிரிழப்பு

(கராச்சி)

பாகிஸ்தான் கராச்சியில் மீண்டும் ஏற்பட்ட வன்முறையில் 5 பொலிசார் உட்பட 23 பேர் பலியாகியுள்ளனர். 40 பேர்வரை படுகாயமடைந்தனர்.

கராச்சியில் நேற்று முன்தினம் சிறுபான்மையினரான முகாதீர் தேசிய இயக்கத்தினரின் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டத்தின் போது தெருக்களில் துப்பாக்கிச் சண்டைகள் நடைபெற்றன. பல பஸ்கள் உட்பட 30 வாகனங்கள் தீக்கிரையாகின.

கடைகள் அந்த நகரில் மூடப்பட்டிருந்தன இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அந்த வீதிகளில் துப்பாக்கி நபர்கள் நடமாடியதாலும் கண்மூடித்தனமாக சுடத் தொடங்கியதாலும். மக்கள் வீடுகளை விட்டு வெளியேற பீதியுற்று இருந்ததால் தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

பொலிஸ் காவலில் இருந்த தங்கள் இயக்கத்தினர் 5 பேர் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து முகாதீர் தேசிய இயக்கம் இந்த வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

ஒரு கோடி மக்கள் தொகையைக் கொண்ட பெரிய நகரமான கராச்சியில் கடந்த 5 நாட்களாக இடம் பெற்ற வன்முறையில் 60 க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். கே - சி

## பவுசர் பழுதடைவதால் குடிநீர் விநியோகம் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றகுடிநீர் விநியோகிக்கும் பவுசர் வாகனம் திடீர் திடீரென பழுதடைந்து போகின்றன. இதனால் குடிநீர்விநியோகம் பாதிக்கப்படுகின்றது.

யுனிசெவ் திட்டத்தின் கீழ் மாநகராட்சி மன்றங்களுக்கு கிடைக்கப்பெற்ற இவ் பவுசர் தற்சமயம் யாழ், மாநகரப் பகுதியில் குடிநீர் விநியோகிக்கும்சேவையில் ஈடுபட்டு வருகின்றது,

இவ் பவுசர் குடிநீர் சேவையில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் இதன் சேவையும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மாநகர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பவுசர் திடிரென பழுதடைவதால் இதற்குரிய உதிரிப்பாகங்கள் கொழும்பில் இருந்து தருவிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளன: 170:

**மணிவாக்கு**

எங்கிருக்கிறூர் கடவுள் என்று கேட்பவன் குருடன்; உனது கண்களில் பார்வை இருந்தால் உனது இதயம் வஞ்சக நினைவுகளால் சூழப்படாமல் இருந்தால் உனது கைவிரல் நுனியிலே கடவுள் விளையாடுகிறுன்.

— கண்ணதாசன்.

# நமது நோக்கு

## சொல்லும் செயலும்

இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்பதைப் பல தடவைகள் ஜெபித்திருக்கிறுர் ஜனுதிபதி தனது நாட்டு மக்களுக்கான தொலைக்காட்சி உரையில்.

பாவம், ஜனுதிபதி! உரையாற்றிய சில மணித்தியாலங்களுக்குள் ளேயே படையினரின் பழிவாங்கல் நடவடிக்கைகள் பொதுமக்களைப் பாதித்திருக்கிறது,

தெளிவான கட்டளைகள் இடப்பட்டிருப்பதாகவும், முன்னைய ஐ. தே க. ஆட்சியின்போது இராணுவம் நடந்துகொண்டதுபோல இனியும் நடக்காது என்று வேறு அடித்துக் கூறியிருந்தார்.

இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய இரு முக்கிய அம்சங்கள் என்ன?

ஒன்று— இராணுவம் இனரீதியான அட்டூழியங்களை, மனித உரிமை மீறல்களை, செய்தது என்பதை ஜனுதிபதி உணர்ந்துள்ளார்: உலகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

வெளிப்படையாக இதனை ஒப்புக்கொண்டமை வரவேற்கப்படவேண்டியதே!

இரண்டு– அவரின் இயலாத் தன்மை, சொல்வதைச் செய்யமுடியாத தன்மை, நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகிவிட்டது.

ஏனெனில்- சில நாட்களுக்கு முன்புதான் அம்பாறைப் பகுதியில் வீடுகள் எரிக்கப்பட்டுப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடாவடித்தனங்கள் அவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த வேளையில்தான் வீடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்பட்ட 5 இளைஞர்கள் சுட்டு கொல்லப்பட்டுப் பனை மரங்களிற் போடப்பட்ட சம்பவத்தை மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பி. பி. ஸிக்கு விளக்கியிருக்கிறுர்.

அதுமாத்திரமல்ல- மகனைக் காக்கச் சென்ற தாயைக்கூடச் சுட்டுக் கொன்ற சம்பவமும் அவரால் விபரிக்கப்பட்டிருக்கிறது,

ஜனுதிபதியைச் சந்தித்து சில வாக்குறுதிகளைப் பெற்றுக்கொண்ட சில தமிழ்க் குழுக்கள் வாயடைத்துப் போய் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தின் மழுப்பல்களை விளக்கங்களை இனியும் கேட்டு ஏற்றுக்கொள்ளும் நிலை கிழக்கில் தொடரக்கூடாது.

ஒன்றுமட்டும் நமக்குப் புரிகிறது. அடுத்தடுத்து வரும் சிங்கள ஆட்சியாளர்களின் பேச்சைக் கேட்டு மயங்கிப்போய் ஏமாறிடத் தமிழினம் தயாராக இல்லை.

ஏனெனில்- சொல்வது ஒன்று, செய்வதோ தமிழின அழிப்புத்தான்!

# விடுதலைப் புலிகளின் ஆதரவு இல்லாமல் எந்த தீர்வையும் முன்வைக்க முடியாது !

## மட்டு. எம்.பி. பி. பி. ஸிக்குப் பேட்டி

[மட்டக்களப்பு]

''தமிழ் மக்களின் பிரச்னையும், வடக்கு - கிழக்குப் போரும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. இப்போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானுல், விடுதலைப்புலிகடன் அரசு மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் விடுதலைப்புலிகளின் ஆதரவு இல்லாமல் வடக்கு - கிழக்குப்பகுதியில் எந்தத்தீர்வையும் அரசு முன்வைக்க முடியாது''

இவ்வாறு, மட்டுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் பரராசசிங்கம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் கூறினுர், அவர் தமது பேட்டியில் மேலும் கூறுகையில்; கிழக்கு மாகாணத்தில் படையினர் மீண்டும் மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர் 1990-ம் ஆண்டுயூன் மாதம் இங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் இன்னும் என் நெஞ்சில் பதிந்திருக்கின்றன. கொக்கட்டிச் சோலை, வந்தாறுமூலை பல்கலைக்கழக சம்பவங்களை தமிழ் மக்கள் மறக்கவில்லை.

ரயர்களில் போட்டு தமிழ் மக்களை எரித்தார்கள், நூற்றுக்கணக்கான தமிழ் மக்களை கைது செய்து சுட்டுக்கொன்றுர்கள் இப்படியான ஒரு சூழ்நிலைக்குத்தான் தறபோது படையினர் தயாராகின்றனர் இதை முளையிலேயே தடுத்து நிறுத்தாவிட்டால் — இது பற்றி உடனடி விசாரணை நடாத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் இந்த அரசாங்கமும் முன்னைய அரசாங்கம் போன்று மனித உரிமை மீறல்கள், ஆட்கடத்தல் போன்ற சம்பவங்களில் இவர்களும் ஈடுபடுவார் என்றே கூறவேண்டும்.

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைமுறையில் இருந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நாளிலிருந்து மக்கள் என்னை இங்கிருந்து வெளியேறவிடாது தடுத்து தம்மை பாதுகாக்கும்படி கூறிவருகின்றுர்கள் இதனுல் பல மனித உரிமை மீறல் சம்பவங்களை பார்த்துமுள்ளேன் சிலவற்றை தடுத்துமுள்ளேன்என்றுப் கூறினுர். வி -ரி

# வடக்கு - கிழக்கு பிரச்னைத் தீர்வுக்கு சமஷ்டி முறையே சிறந்த வழி!

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரச்னைக்கு தீர்வுகாண சமஷ்டி நிர்வாக முறையே சிறந்த வழியென்று தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

கடந்தகாலத்தில் நாட்டிலுள்ள பெரும்பாண்மையான மக்கள் சமஷ்டி முறை பற்றி பேசுவதற்கு அஞ்சினுர்கள். இன்று இந்த நிலைமை மாறிவிட்டது என்று கூட்டணியின் உதவித் தலைவர் திரு வி. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இலங்கை வானெலிக்கு வழங்கிய பேட்டியொன்றில் சமஷ்டி நிர்வாக முறை பற்றி நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் இன்று தெளிவாக புரிந்து கொண்டுள்ளார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த காலத்தில் வடக்குக் கிழக்குப் பிரச்சனைக்கு தீர்வாக சமஷ்டிமுறையொன்றை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக தெரிவித்த போதிலும் இன்று தற்போதைய நிலையில் அவர்களது நிலைப்பாடுபற்றி தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் கூறினுர்.

-ரி

# ''இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு மூலமே முடிவு காணமுடியும்''

(கொழும்பு)

''மீண்டும்யுத்தம் தொடங்கியுள்ளது. யுத்தம் தொடங்கி ஆயிரக்கணக்கானேர் கொல்லப்பட்ட பின்பும் இப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு மூலமே முடிவுகாண முடியும். எனவே அநியாயமான அழிவுகளைத் தவிர்த்து இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்து தீர்வுகாண முற்படவேண்டும்'' இவ்வாருக தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா சம்பந்தன் தெரிவித்தார.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இனப்பிரச்னைக்கு அரசியல் ரீதியாகவே தீர்வுகாணவேண்டும் என்று இன்றும கூறுவதனுல் பகைமை உணர்வுகளை நீக்கி, மோதலை நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குரிய வழிவகைகள் குறித்து நடவடிகைகை எடுப்பது அவசியம்.

யுத்தம் முழு நாட்டுக்குமே அழிவை ஏற்படுத்தும். இதனை உணர்ந்து சமாதானத்தை ஏற்படுத்த இருதரப்பினர் மத்தியிலும் நல்லுறவுள்ள மூன்ரும் சக்தியொன்று தலையிடுமாயின் அதனை நாம் வரவேற்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

-ர-ரி

# சாரதிகளுக்கு சம்பள உயர்வு

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் சாரதிகளுக்கு வழங்கப்படாதிருந்த மூன்று வருடாந்த சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு யாழ் சுகாதார பிரதி மாகாண பணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது. கடந்த 1994ம் ஆண்டில் வெளியிடப்பட்ட சம்பள உயர்வு பற்றிய சுற்று நிருபத்திற்குப் பின்னர் வந்த திருத்தப்பட்ட சுற்று நிருபததின் பிரகாரம் இந்த சம்பள உயர்வு சிலகுறிப்பிட்ட தரங்களை சேர்ந்த திணைக்கள சாரதிகளுக்கு வழங்கப்படவிருப்பதாக அறியப்படுகின்றது.

72

# அதிபர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி-ப2-30 மணிக்கு யா- மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளர் திரு சுந்தரம் டிவகலாலாவும் யாழ், வலயம் 1இன் கல்விப்பணிப்பாளர் திரு. இ சிவானந்தனும் கலந்துகொளவார்கள் பாடசாலைகளின் பௌதிகத் தேவைகள் ஆளணித்தேவைகள் மற்றும் விளையாட்டு உபகரணத்தேவைகள் பற்றிய விபரங்கள் இக்கூட்டத்தில் திரட்டப்படவுள்ளன.

-ரி

## பலதும் பத்தும்

### 'தட்சரின் பொன்'

''தட்சரின் பொன்'' என்ற நூல் அண்மையில் இலண்டனில் வெளியாகிப் பரபரப்போடு விற்பனையாகிறது. பரபரப்பு ஏன்?

முன்னுள் பிரதமர் மார்கரட் தட்சரின் மகன்... மார்க் தட்சரின் வணிக சங்கதிகள் தான் இந்த நூலில் அம்பலமாகியுள்ளன. ஒரு பிரதமரின் மகன்... சர்வதேச வணிகத்தில்... குறிப்பாக ஆயுத விற்பனையில் ஈடுபட்டிருந்தார் என்ருல்... சுவையான செய்திகள் வராமலா போகும்?

இந்த நூலின் ஒரு பகுதியில்... சிறீலங்காவிற்கு அவர் மேற்கொண்ட இரகசியப் பயணங்கள்... அரசியல் தலைவர்களோடு நடத்திய சந்திப்பு... ஆயுத விற்பனைகள்... வெளிவந்துள்ளனவாம்!

தாயார் தட்சர் அம்மையார் சிறீலங்கா வந்து மகாவலியின் ஒரு அங்கமான மின் திட்டம் தொடக்கிவைத்துப் பேசியபோது பயங்கரவாதம் ஒழிக்க உதவுவேன் என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கும்போது... யாழ். பொலிஸ் நிலையம் 'காணுமற்' போய் விட்டது நினைவிருக்கிறதா?

— மயூரன்

# அரசுக்கு எதிராக ஐ.தே.க. நம்பிக்கையில்லா தீர்மானம்

(கொழும்பு)

அரசியல் அமைப்புத் திருத்தம், அமைச்சர் ஜி.எல் பீரிஸ் குறிப்பிட்டது போன்று யூலை 31-ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காவிட்டால், அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது என்று 'லங்காதீப' தெரிவித்துள்ளது.

தேர்தல் வாக்குறுதியின்படி பொ.ஐ முன்னணி அரசாங்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதி முறையை ஒழிப்பதாகக் கூறியுள்ளது. இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்ருததற்கே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர உள்ளார்கள்.

இது சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டவாக்கக் குழுவின் தலைவர் கே. என். சொக்ஸி தலைமையில் ஆராயப்பட்டு வருவதாக 'லங்காதீப' மேலும் தெரிவித்தது.

-ம-ரி

### ஒபறேஷன் சேவ் பசேஜ்

(கொழும்பு)

தொண்டமானுறுப் பகுதியில் கடந்தவாரம் படையினர் 'ஒபறேசன் சேவ் பேசஜ்' என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. க-ரி

# உணவு முத்திரைகள் விரைவில் விநியோகம்

[யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரண உணவு முத்திரையின் பத்தாவது தொடர் முத்திரைகளை வெகு விரைவில் வழங்குவதற்கான முயற்சிகளை யாழ். செயல சமுகசேவைகள் பகுதி மேற்கொண்டுள்ளது.

'கோமாரி' கப்பலில் இவ் உணவு முத்திரைகள் எடுத்துவரப்பட்டன.

உணவு முத்திரைகள் இவ்வார இறுதிக்குள், சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்

பின்னர் கிராமசேவையாளர்கள் மூலம் பிரதேச செயலகம் பொதுமக்களுக்கு முத்திரைகளை விநியோகிக்கும்.

170-சி

# வ. போ. ச. ஊழியர்களுக்கு இருமாத சம்பளம் வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

வடபிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு கடந்த மார்ச் ஏப்பிரல் ஆகிய இருமாதங்களுக்கான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது

கொழும்பிலுள்ள போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து மேறபடி சம்பளபணத்தை பெறுவதற்கு சென்ற அதிகாரி இன்னும் இங்கு திரும்பிவரவிலலை என்றும்

(5ம் பக்கம் பார்க்க)

**தமிழீழம் எங்கும் தரிசின்றி பயிரிடுவோம்**

# ஷெல், பீரங்கித் தாக்குதல்களினல் செல்வச் சந்நிதி பூசைகள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து கடந்த 17-ம் திகதி நடத்தப்பட்ட ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களினல் தொண்டைமானுறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய அன்னதான மடங்கள், குருமார் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனுல் மேற்படி ஆலய பூசகர்கள் ஆலயச் சுற்றுடலைவிட்டு வெளியேறியுள்ளனர்.

தொடர்ந்தும் இப்பகுதியை நோக்கி தாக்குதல்கள் நடைபெறுவதனுல் ஆலய பூசைகள் நடைபெறுவதில்லை.

இச்சம்பவம் தொடர்பாக தொண்டைமானுறு சந்நிதியான் ஆச்சிரமம் நல்லை ஆதீன முதல்வருக்குஎழுதியுள்ளகடிதமொன்றில் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாருன விரும்பத்தகாத வேதனைக்குரிய தாக்குதலானது இந்து சமயத்தவர்களுக்கு வேண்டுமென்றே செய்த துன்ப நிகழ்ச்சியாகும்.

தாங்கள் இப்பேரழிவை நேரில் சமூகமளித்து நிலைமையைப் பார்வையிட்டு, அரசாங்க அதிபருடனும் இந்து சமயப் பேரவையுடனும் தொடர்புகொண்டு அரசாங்கத்திற்கு அறிவித்து ஆலயத்தையும் ஆலயச் சுற்றுடலையும் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துத் தரும்படியும் பூசைகள் நடைபெறுவதற்கு வேண்டிய புனருத்தாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்குரிய கிரியைகள் நடைபெறுவதற்கு வேண்டியவற்றைச் செய்வித்துத் தரும்படியும் மேலும் வருடாந்த மகோற்சவம் நடைபெறுவதற்கு இன்னமும் 3 மாதங்களே உள்ளன என்பதனையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்,

-ரி

# டீசல் பற்றுக்குறையால் ஆஸ்பத்திரி சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையின் பாவனைக்கான டீசல் கடந்த மாதம் கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்படாமையினல் ஏற்பட்டுள்ள டீசல் பற்றுக்குறையினல் ஆஸ்பத்திரியின் பல அத்தியாவசிய சேவைகள் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

டீசல் பற்றுக்குறை காரணமாக நேற்று முன்தினம் முதல் மின்சார சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைக்குரிய சத்திரசிகிச்சைகளும், எக்ஸ்றே, அன்றைய அனுமதி நடக்கும் நோயாளர் விடுதி, இரத்தவங்கி தவிர ஏனைய பிரிவுகளுக்கு மின்சாரம் குறிப்பிட்ட தேவைகளுக்கு மாத்திரமே வழங்கப்படவுள்ளது.

இந்நிலையை அடுத்து இரவு 10 மணிக்குப் பின் ஆஸ்பத்திரியின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

90-ரி

# 30 ஒட்சிசன் சிலிண்டர்களே யாழ்-ஆஸ்பத்திரிக்குவந்தன

[யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு 30 ஒட்சிசன் சிலிண்டர்கள் வந்துசேர்ந்துள்ளன.

இந்த ஒட்சிசன் சிலிண்டர்கள் ஒரு வார காலத்தேவைக்கும் போதாது என்று வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில்இருந்துபோதியளவு ஒட்சிசன் சிலிண்டர்கள் வராததினல் வைத்தியசாலையில் இவற்றிற்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

170-சி

# வடபகுதியில் விளையாட்டுத்துறை விரைவில் விருத்தி செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

''வடபகுதியில் விளையாட்டுத்துறை விரைவில் விருத்தி செய்யப்படுவதுடன், இப்பகுதியில் நீண்ட காலமாக நிரப்பப்படாமலிருக்கும் விளையாட்டு உத்தியோகஸ்தர்களின் வெற்றிடங்களும் நிரப்பப்படும்.''

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறையின் உதவிப் பணிப்பாளர் திரு. சுந்தரம் டிவகலாலா, யாழ். மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் நிர்வாகிகளுடன் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் நடாத்திய கலந்துரையாடலில் கூறினுர். திரு. டிவகலாலா தமது உரையில் மேலும் கூறுகையில்:

தென்பகுதியின் விளையாட்டுத் தரத்துக்கும் வடபகுதியின் விளையாட்டுத் தரத்துக்கும் இடையில் வித்தியாசம் இருப்பது நன்கு தெரிகிறது. வடபகுதியில் விளையாட்டுத் துறைக்குத் தேவையான அடிப்படைச் சாதனங்கள் ஏதும் தற்போது இங்குஇல்லை.

விளையாட்டு உபகரணங்கள் இல்லாமையும் ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாததும் விரைவில் நிவர்த்தி செய்யப்படும்.

வடபகுதியில் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கும் விளையாட்டு உத்தியோகஸ்தர்களின் வெற்றிடங்களும் பயிற்சியாளர்கள் வெற்றிடங்களும் நிரந்தரமாகவும் தற்காலிக அடிப்படையிலும் விரைவில் நிரப்பப்படும்.

அத்துடன் விளையாட்டு உபகரணங்களை வீரர்கள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளும்முகமாக யாழ். நகரில் கூட்டுறவுக் கடை ஒன்றும் விரைவில் திறக்கப்படும். விளையாட்டுத் துறைக்குத் தேவையான நூல்கள், வீடியோ கசட்டுகள், ஒலிப்பதிவு நாடாக்கள் போன்றவையும் விரைவில் யாழ். மாநகரசபை பொதுநூல் நிலையத்தில் வைக்கப்படும் என்றும் கூறினுர்.

வி-சி

# யாழ். ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையில் பெரும்பாலான மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

வைத்தியசாலையின் மெடிக்கல் கிளினிக்கில் பெரும்பாலான மருந்துகள் முடிந்திருப்பதால் தட்டுப்பாடான மருந்தை வெளியிடங்களில் வாங்கும்படி நோயாளர்களை மெடிக்கல் கிளினிக் பகுதியினர் கேட்டுள்ளனர்.

இதனைவிட சில மருந்துகள் முடியும் தறுவாயில் இருப்பதால் நோயாளர்களுக்கு வழங்கும் மருந்தையும் வைத்தியசாலை மெடிக்கல் கிளினிக் குறைத்து வழங்கிவருகின்றது.

இதேசமயம் வைத்தியசாலைக்கு இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகளை இம்மாத இறுதிக்குள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவருவதற்கான முயற்சிகளை வைத்தியசாலைப் பணிப்பாளர் கொழும்பில் மேற்கொண்டுவருவதாகவும் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

154-170-சி

# இன்றையநிலையில் நாம் ஒரு ராணுவ வெற்றியைப் பெறவேண்டும்!

## கைதடியில் இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

''இன்றைய நிலையில் நாம் ஒரு இராணுவ வெற்றியைப் பெற வேண்டும். இந்த வெற்றியினுல் அரசியல் மாற்றம் நிகழும். அதனூடாக தீர்வு ஏற்படும் அல்லது தீர்வைப் பெறலாம்'' இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தெரிவித்தார்.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 39 வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிலையத் தலைவர் திரு. க. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் கூறியதாவது;

உலகநாடுகள் உதவிகள் எதுவுமின்றி பலத்த அழுத்தத்தின் மத்தியிலும் சொந்த பலத்தில் நின்று தேசம் விடியும் என்ற நம்பிக்கையுடன் போராடுகின்ருேம். நாம் சுதந்திரத்தைப் பெறுவோம் என்ற நம்பிக்கையை எமது போராட்டம் தந்திருக்கிறது.

தமிழ் மக்களுடைய வாழ்வைப் பற்றியும் மேம்பாட்டைப் பற்றியுமே சிந்திப்பவர் எமது தேசியத் தலைவர். அதனுல்தான் எத்தனையோ தடவைகள் எமது மக்களுக்கு ஏற்படவிருந்த அழிவை அவர் தடுத்திருக்கிறுர்.

பொருளாதாரத் தடைபோட்டு படையெடுப்பு நடத்த அரசு திட்டமிட்டிருக்கிறது. இந்த திட்டத்தை முறியடிக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு பெரிய அழிவு ஏற்படவிருந்த நேரத்தில் தலைவர் அவர்கள் விமான எதிர்ப்பு படையை உருவாக்கி அந்த அழிவைத்தடுத்து நிறுத்தினுர்.

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படாது விட்டால் கொடிய அழிவுகள் எம் மண்ணிலே நடந்திருக்கும். எனவே தலைவருடைய திட்டத்தினுல் இன்று பலருடைய சாவு தடுக்கப்பட்டது.

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர் விமானங்களின் தொடர்புகள் எதுவுமின்றி யாழ். குடாவிலுள்ள இராணுவத்தினர் அவதிப்படுகின்றனர்.

மேலும் கடல்வழித்தொடர்பும் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. இதனுல் இராணுவம் பலவீனமடைந்துள்ளது.

இராணுவம் பலவீனமாக இருக்கிறது என்று நாம் சும்மா இருக்க முடியாது. ஏனெனில் இதே இராணுவம் எமது மக்கள் மீது அழிவுகளை ஏற்படுத்த தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறது இதனை நாம் முறியடிக்க வேண்டும் இதற்கு எமக்கு போதிய படைபலம் வேண்டும் என்ருர்.

இந் நிகழ்வில் நிலையப் பொருளாளர் து. மகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்த செயலாளர் திரு. கி. ஜெயரூபன் நன்றியுரையை வழங்கினுர். விழவின் இறுதியில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

-ரி

# யாழ். நகரில் பொருட்கள் இருந்தும் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பொருள்கள் தாராளமாக இருந்தும் பொருள்களின் விலை நாளுக்கு நாள் திடீர் திடீரென்று உயர்ந்து செல்கின்றன.

தடைநீக்கப்பட்ட பொருள்கள் தாராளமாக யாழ்ப்பாணம் வந்தும் அவற்றைக்கூட வர்த்தகர்கள் தாங்கள்நினைத்த அளவு உச்ச விலையில் விற்பனை செய்துவருகின்றனர்.

தீப்பெட்டி ஒன்று 3 ரூபாவாகவும், சன்லைற்சவர்க்காரம் 14 ரூபாவாகவும், சீனி 48 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

இதனைவிட மற்றும் சில சில்லறைப் பொருள்களும் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

—170-சி

# திருட்டுப்போன மாடுகள் காவல்துறையால் மீட்பு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டையில் களவாடப்பட்ட 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு காளை மாடுகளை சங்கானை காவல் துறையினர் நல்லூரில் வைத்து மீட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை முதலி கோவிலடி என்ற இடத்தை சேர்ந்த கிருஷ்ணன் மயில்வாகனம் என்பவருக்கு சொந்தமான 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடுகள் திருட்டுப் போனது தொடர்பாக சங்கானை காவல்துறையில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து தீவிர விசாரணை மேற்கொண்ட காவல் துறையினர் நல்லூரில் உள்ள வீடு ஒன்றில் மேற்படி திருடப்பட்ட இரு மாடுகளையும் கைப்பற்றினுர்கள். இறைச்சி வெட்டுவதற்காக இந்த மாடுகள் திருடப்பட்டதாக விசாரணைமூலம் தெரியவந்துள்ளது. மாடுகள் உரிமையாளரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

72-ரி

# பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெறும் படிவங்களுக்கு தட்டுப்பாடு இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பதிவாளர் திணைக்களத்தில் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சப் பத்திரங்கள் பெறுவதற்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பப் படிவங்களுக்கு எதுவிதத் தட்டுப்பாடும் இல்லை என்று யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு. சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு வசதியாகப் பொதுமக்களுக்கு இப்படிவங்கள் பதிவாளர் திணைக்களத்தினுல் தாராளமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க, யாழ். மாவட்டத்தில் கடந்த சில காலமாக மின்சாரம் தடைப்பட்டிருந்தபடியால், பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் போட்டோப் பிரதி செய்து வழங்கமுடியாதிருந்தது. இதனுல் இதற்கான அத்தாட்சிப் பத்திரங்களில் எழுதிப் பொதுமக்களுக்கு வழங்கவேண்டி இருந்தது. இதனுல் இப்பத்திரங்கள் வழங்குவதில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்தன.

யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் மேற்கொண்ட தீவிர முயற்சி காரணமாக, இப்பொழுது யாழ் செயலகத்திற்கு மின்சார வசதி கிடைத்துள்ளது. அத்துடன் போட்டோப் பிரதிகள் செய்யும் இயந்திரம் ஒன்றும் அரசாங்க அதிபரால் பெற்றுத் தரப்பட்டுள்ளது. இப்பொழுது தாமதம் இன்றிப் பொதுமக்களின் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் இப்போட்டோப் பிரதி செய்யும் இயந்திரத்தின் மூலம் விரைவாகப் போட்டோப் பிரதி செய்து வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

162 ரி

யாழ்ப்பாணம் ... நூலகம்.

# பிரச்னைக்கு தீர்வுகாண சுதந்திரக்கட்சி ஐ.தே.க. இணைந்துசெயற்படவேண்டும்

## — ஐ. தே. க. எம். பி. சுசில் முனசிங்க பேட்டி

(கொழும்பு)

ஒரு இனத்தினர் அதிருப்தியே தீவிரவாதமாக வளர்கிறது. தமிழரில் அநேகமானோர் சுயஆட்சியையே விரும்புகிருர்கள். அது சமஷ்டியிலும் பார்க்க கூடுதலானதாக இருக்க வேண்டும். இதனை வழங்குவதோ விடுவதோ என்பதற்கு ஐ.தே கவும் சிறிலங்கா சுதந்திரகட்சியும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

முன்னுள் மேல்மாகாண முதல்வரும் ஐ தே. க. எம்பியுமான சுசில் முனசிங்க சண்டே ஐலண்டுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் அவர் தெரிவித்திருப்பதாவது:

மாகாண சபை முறை கொண்டுவந்த போதிலும் மத்திய அரசு தன் அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்கவில்லை நான் பதவி வகித்தபோது அதனைஉணர்ந்தேன். 13வது ரசியல் சட்டதிருத்தத்தின் மூலம் மத்திய அரசு மாகாணங்களுக்கு பகிர்ந்து அளிக்காமல் பல அதிகாரங்களை குறுக்குவழியில் தன்னகத்தே வைத்துக்கொண்டது.

தமிழ் தலைவர்கள் 1950 லிருந்து சமஷ்டி முறையை கேட்டுவந்தார்கள். அன்றிலிருந்தே பிரச்னை ஆரம்பித்து விட்டது. திரு எஸ் டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்க சமஷ்டியை வழங்க விரும்பாமல் பிரதேச சபைகளை வழங்க முன்வந்தார். அதனை ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையில் பலர் எதிர்த்தனர் ஐ. தே. க. வின் அச்செயலால் சிங்கள சமுதாயம் இரண்டாக பிரிந்து நின்றது. பின்பு 1983ம் ஆண்டு இனக்கலவரம் வந்தது. தீவிரவாதம் வளர்ந்தது. அதற்கு ஐ. தே. க. வே முழுப்பொறுப்பும் எடுக்க வேண்டும். அந்த அரசில் இருந்தவர்களே இந்த நிலைமையை உருவாக்க உதவினர்.

ஜே. ஆர். மாகாண சபையை முறையை முன்வைத்த போது சுதந்திரக் கட்சி எதிர்த்தது அச்செயல் ஜே. வி. பி. யின்தெற்கில் உருப்பெற உதவியது. ஜே வி. பி. யின் வளர்ச்சியே திரு. பிரேமதாசா இந்திய படையை இலங்கையிலிருந்து வெளியேற்ற நேரிட்டது.

திருமதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் காலத்தில் ''திரு. பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்த நான் அனுமதிக்க மாட்டேன்'' என பிரசாரம் செய்தார். அவருக்கு தமிழர் வாக்கு தேவைப்பட்டது.

தற்போது 3வது ஈழப்போர் ஆரம்பமானதும் 'இந்தியாவே எனக்கு உதவி செய்'' என கேட்கிருர். இவையெல்லாம் ஒருவர் செய்வதை ஒருவர் எதிர்ப்பதும் மற்றவர் செய்வதை முதல் ஆதரித்தவர் பின் எதிர்ப்பதுமே நிகழ்கிறது.

இந்தமுறை வெளிநாட்டு தலையீடு இருக்காது என்றே நான் நம்புகிறேன் தற்போதைய அரசும் வெளிநாட்டு சக்தியின் தலையீட்டை விரும்பினுல் அது கொள்கையில்லாததையே காட்டுவதாக அமையும் திரு. பிரேமதாஸா - ஐ. தே. க.வின் அப்போதைய தலைவர் இந்திய படையை வெளியேற்றிய படியால் அவ்வாறுன யோசனையை ஆதரிக்கக்கூடாது. இல்லையேல் அது கொள்கை மாறுபடுதலை எடுத்துக்காட்ட நேரிடும். இந்தியாவும் இனிமேல் படையை அனுப்பாது என்றே நம்புகிறேன. பிரதமர் ராவ் இலங்கை பிரச்னை - அது உள்நாட்டு பிரச்னை என்று கூறிவிட்டார்.

ஆகவே நல்ல அரசியல் ஆலோசனையின் கீழ், தந்திரோபாயங்களை கைக்கொண்டு தற்போதைய பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். வே-சி

---

## மட்டுநகரில்

(1-ம பக்கத தொடர்ச்சி)

படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி நகர்ப்புறமக்கள் பலர் கிராமங்களுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, வி-சி

## வடகிழக்குபுனரமைப்பு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் அரசு உதவுவதற்கு இன்னும் விரும்புகின்றதெனறும் ஆனுல் இப்பகுதிகளில் பூரண அமைதி ஏற்பட்ட பின்பே இப்பணிகளுக்காக இலங்கை அரசுககு உதவி செய்ய முடியுமெனவும் தெரிவித்துள்ளது.

படையினரும், புலிகளும் மோதலைக் கைவிட்டு மீண்டும் சமாதான பேச்சுககளில் ஈடுபடவேண்டும் என்றும் பிரிட்டிஷ் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. -வி-சி

## படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டது. எனினும் தற்போது எழுந்துள்ள நிலைமை காரணமாக இந்தத் தீர்மானத்தை அமுல் செய்ய முடியாதுள்ளது.

அதிகரித்த யுத்தச் செலவுடன் வரவு-செலவுத் திட்டதுண்டு விழும் தொகையை குறைக்க அரசாங்கம் எடுக்கும் சில நடவடிக்கைகள் அடுத்த சில தினங்களில் அறிவிக்கப்படும்.

அரசு நாணயத் தாள்களை அச்சிடவோ, மத்திய வங்கியில் கடன் எடுக்கவோ விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். வி-ம-சி

---

# பாடசாலை மாணவர்களுக்கு கல்விஉபகரணம் அன்பளிப்பு

[உடுவில்]

சண்டிலிப்பாயில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கும் ஆறும் ஆண்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடசாலைக் கல்வி உபகரணங்களை யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் இலவசமாக வழங்கியுள்ளனர்.

மேலும் மேற்படி பிரதேசச் செயலர் பிரிவில் அமைந்துள்ள அகதி முகாம்களில் குழாய்க் கிணறுகளையும், திறந்த கிணறுகளையும் அமைத்துக் கொடுத்து, நீர் வழங்கல் பிரச்னையை குறைக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இக்கிணறுகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் அமைத்துக் கொடுக்க உள்ளனர். 109-சி

## கலைத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழி, கலைத்திறன் போட்டிகள் இம்மாதம் 26 27ம் திகதிகளில் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறுமெனக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த, துரைசிங்கம் அறிவித்துள்ளார்:

இப் போட்டிகளில் முதலிடம் பெறுவோர் வலய மாவட்டப் போட்டிகளில் பங்கு கொள்ள அனுமதிக்கப் படுவர். ரி

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்றைய ஆட்டத்தில் கலந்து கொள்ளும் கழகங்களின் விபரம் வருமாறு:

பாஷையூர் சென் அன்ரனிஸ் கழக மைதானத்தில் இன்று நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் பாடும்மீனை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் கழகமும், 2 வது ஆட்டத்தில் கிறீன்பீல்ட் கழகத்தை எதிர்த்து சென் மேரிஸ் கழகமும் மோதும். -வி

## இராசி பலன்

25-05-1995

வியாழக்கிழமை

(தமிழுக்கு வைகாசி -11)

ஏகாதசி முற்பகல் 9-39 வரை, ரேவதி பின்னிரவு 1-24 வரை, சித்தாமிர்த யோகம், இராகுகாலம் பி.ப. 1-22 முதல் 2-52 வரை, சுபவேளை காலை 7-22 முதல் 8-52 வரை.

மேஷம்: பணிந்துபோதல், வேலைக் கஷ்டம், அலைச்சல்.

இடபம்: முயற்சி பலிதம், தியாகசிந்தை, சுபநிகழ்ச்சி.

மிதுனம்: தொழில் சிறப்பு, பெரியோர் உதவி, பயணம்.

கடகம்: சகோதர வெறுப்பு, கண்டனம், மனவேதனை.

சிங்கம்: உள்ளக் குமுறல், மனைவியின்கோபம், பதட்டம்.

கன்னி: வாக்கு வசீகரம், பெண் உபதேசம், காரிய சித்தி.

துலாம்: பணியாள்பெருமை நியாயம் கற்பித்தல், பண வரவு.

விருச்சிகம்: விவேகமற்ற செயல், உடல்அசதி, புத்திரர் கவலை.

தனுசு: மறக்கமுடியாத சம்பவம், தொழில் வேதனை, அகங்காரம்.

மகரம்: மனக்களிப்பு. நினைத்தது நிறைவேறல், வெகுமதி.

கும்பம்; ஏக்கப் பெருமூச்சு. குடும்ப விவகாரம், அகால உணவு.

மீனம்: முதன்மைப்படுத்தல், குடும்பசுகம், பிதா சிந்தை.

— ஜோஸ்யர்

# யாழ்.நகர பகுதியில் வழிப்பறி கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இரவு நேர வழிப்பறிக் கொள்ளைகள் அடிக்கடி நடைபெற்றுவருவதாகத் தெரிய வருகிறது.

யாழ். செம்மணி வீதியூடாக இரவு நேரங்களில் செல்லும் பயணிகள், திருடர் கூட்டம் ஒன்றினுல் வழிமறிக்கப்பட்டு அவர்களிடம் இருக்கும் பொருட்கள் கொள்ளையடிக்கப்படுவதாகவும், இதனுல் இப்பாதையால் இரவு நேரங்களில் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஓட்டுமடம் பகுதியில் அண்மையில் மானிப்பாய் நோக்கிச் சென்றுகொண்டிருந்த வர்த்தகர் ஒருவர், கொள்ளையர்களால் வழிமறித்துத் தாக்கப்பட்டதுடன், அந்த வர்த்தகரிடம் இருந்த பணமும் கொள்ளையர்களால் பறித்தெடுக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே. 162 ரி

## பங்கீட்டு அட்டைக்கு சீனிவிநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் உள்ள ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பாவனையாளர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் சீனி வழங்கப்பட்டுவருவதாக யாழ் பிரதேச செயலரும், பிரதிக் கூட்டுறவு ஆணையாளருமான கலாநிதி குணராசா தெரிவித்துள்ளார்.

ஒரு அங்கத்தவரைக் கொண்ட பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ சீனியும் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு இரண்டு கிலோ சீனியும், மூன்று அங்கத்தவர்களும் அதற்கு மேல் உள்ள பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு மூன்று கிலோ சீனியும் கட்டுப்பாட்டு விலையில் தற்பொழுது வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். 162 - சி

# மந்திகை மருத்துவமனையில் டீசல் பற்றுக்குறைவினுல் மின்சாரம் தடைப்படும்

[நெல்லியடி]

மந்திகை மருத்துவமனையில் டீசல் பற்றுக்குறைவினுல் அம்புலன் சேவையும், ஜெனரேட்டர் பாவனையும் தடைப்படும் அபாயநிலை உருவாகியுள்ளது.

இது பற்றி வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கையில், இவைத்தியசாலைக்குரிய டீசல் கொழும்பிலிருந்து யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குக் கொண்டுவரப்பட்டு, பங்கீட்டு அளவில் விநியோகம் செய்யப்பட்டுவந்தது.

தற்பொழுது டீசல் வழங்க அனுமதி மறுக்கப்பட்டதால், யாழ். சுகாதாரப் பணிமனையும் டீசலை வழங்கவில்லை.

இதேவேளை தற்பொழுது கையிருப்பில் உள்ள 94 லீற்றர் டீசலும் 3 நாட்களுக்கே போதுமான நிலையில் உள்ளது.

இதனுல் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவையும். ஜெனரேட்டர் பாவனையும் ஸ்தம்பிதம் அடையும். அப்போது அவசர நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 160 ரி

## நிவாரணம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இடம் பெயர்ந்தவர்களுக்கான 25 பீ, 26 ஏ கட்டங்களுக்கான நிவாரணப் பொருள்கள் கடந்த திங்கள் முதல் சங்க கிளைகளினூடாக வழங்கப்படுகின்றன. (170-ரி

## வ. போ. ச.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிய படுகின்றது.

வடபிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில் டிப்போ காரைநகர் டிப்போ பருத்தித்துறைடிப்போ கிளிநொச்சி டிப்போ ஆகிய டிப்போகளில் கடமையாற்றிய ஊழியர்களின் சம்பளமே இதுவரை வழங்கப்படாதிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது 72

## முஸ்லீம்

(-1ம் பக்கத்தொடர்ச்சி)

தமிழர் இறந்திருக்கக்கூடுமென்று உத்தியோகப்பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில தினங்களாக கிழக்கின் பல பகுதியிலும் படையினராலும், முஸ்லீம் காடையர்களாலும், ஊர்காவல் படைகளாலும் பல தமிழர்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனுல் கிழக்கில் கடந்த சில தினங்களாக பெரும் பதற்றம் நிலவுகிறது. -வி-சி

## தமிழர்க்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாக தெரிவிக்கபடுகிறது.

பௌத்த மக்களை பொறுத்தவரையில் இது உரிமை மீறலாகவும், சுதந்திரத்துக்குப் பாதகமாகவும் அமைந்துள்ளது.

நாட்டில் எந்த பிரதேசத்தையோ அல்லது தமிழர் அமைப்புகள் கூறும் தமிழர் பிரதேசங்களையோ பிரித்துக் கொடுப்பதற்றும், இந்த பௌத்த அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. -ம-வி-சி

## வட-கிழக்கு

(1-ம் பக்கத தொடர்ச்சி)

களை எடுத்து செல்வதற்கு மருந்துச்சபையின் அனுமதியை பெற்ற பின்னரே மருந்துகளை எடுத்து செல்ல முடியும்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலைக்குரிய இரண்டாம் காலாண்டு மருந்துகளை கப்பலில் எடுத்து வருவதற்கு மருந்துச் சபையின் அனுமதியைப் பெறவேண்டுமென்று கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் போதனா வைத்தியசாலை அதிகாரி பணிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவ் அதிகாரி மருந்துச் சபையின் அனுமதியை கோரியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 170-சி

# படையினரின் பதவி உயர்வில் சேவை மூப்பு கணிக்கப்படாது

(கொழும்பு)

ஆயுதப் படையில் உயர் பதவிகள் வழங்கும்போது சேவை மூப்பைப் பாராது அதிகாரிகளின் கடமை, ஆற்றல் என்பனவற்றை கருத்திலெடுக்கள்ள வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சிபார்சு செய்துள்ளார்.

உயர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் அலுவல்களில் ஆகக் கூடுதலான சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பதவி உயர்வு வழங்கும் போது, சேவை மூப்பை மட்டும் கருதமுடியாது எனவும் ஒப்படைக்கப்படும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற தவறுவதை புறக்கணிக்க முடியாது என்றும் அமைச்சு கூறியுள்ளது.

தம்மிடம் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுவதில் ஒரு அதிகாரியிடம் இருக்கும் திடசங்கற்பம், அர்ப்பணம், துணிச்சல் என்பவற்றின்மீதும கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் அவற்றுக்குரிய நன்மதிப்பு வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

-ம-சி

# பாலபத்தபெண்டி ஆஸ்பத்திரியில் அனுமதி

[கொழும்பு]

ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. பாலபத்தபெண்டி இருதயநோய் காரணமாக மலேசிய வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருதய பலவீனம் காரணமாக இவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் வைத்தியர்களின் ஆலோசனைக்கிணங்க மலேசியா சென்றுள்ளார். இவருடன் இவரது குடும்பத்தவர்களும் மலேசியா சென்றுள்ளனராம்.

அண்மைக்காலமாக திரு. பாலபத்தபெண்டி இருதயக் கோளாறு காரணமாக அடிக்கடி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வந்ததும் தெரிந்ததே.

[சி]

# சங்கிலியால் பிணைக்கப்பட்டு ஐவர் பலாலியில் தடுத்துவைப்பு

[நெல்லியடி]

சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் ஐந்து கைதிகள் பலாலி இராணுவ முகாமில் அறையொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இவர்களுள் இருவர் சுமார் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் ஏனையோர் அதற்குடபட்ட வயதுடையவர்களென்றும் தெரியவருகிறது.

இதேவேளை இம்முகாமில் சுமார் 17 வயது மதிக்கத்தக்க ஊமைப்பெண் கைதி ஒருவரும் பலத்த பாதுகாப்புடன் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது

அண்மைக்காலமாக இங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மீது படையினர் கடும் தாக்குதலையும் சித்திரவதைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் விடுதலைபெற்ற பலர் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு படையினர் இலக்காகும் போதெல்லாம் கைதிகள் தாக்கப்படுவது வழமையாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

160 சி

# தமிழகத்திலிருந்து 5000 தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

[சென்னை]

தமிழகத்திலிருந்து எதிர் வரும் ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதத்தில் ஐயாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாக அகதிகள் மறுவாழ்வு ஆணையாளர் சிறிசதாஸ் காந்தி தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் வத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; இதுவரை தமிழகத்திலிருந்து 70,000 அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர், மேலும் ஆயிரம் அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 5 000 ஆக வரும்போது ஆகஸ்ட், செப்ரெம்பர் அளவில் திருப்பி அனுப்பப்படுளர்.

சென்னை, நீலகிரி, தஞ்சாவூர், நாகபட்டினம் நீங்க ஏனைய இடங்களிலுள்ள 121 முகாம்களில் சுமார் 14,733 குடும்பங்களைச்சேர்ந்த 56,770 தமிழ் அகதிகள் உள்ளனர். இவர்களுக்காகஆண்டுதோறும் 16 கோடிரூபா செலவிடப்படுவதாகவும் தெரிவித்தார்

ர-சி

# செஞ்சிலுவை அதிகாரி யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் கொழும்புக்கு வந்துள்ளார்.

இவர் ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இவ்வார இறுதிக்குள் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -170-சி

# சமையல்காரரை அனுப்ப சந்திரிகா மறந்துவிட்டாரா?

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடனான நான்குகட்டபேச்சிலும் ஜனாதிபதி சந்திரிகா தனது சமையல்காரரை மட்டும் அனுப்புவதற்கு மறுத்துவிட்டார் போலிருக்கிறது என 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

தமிழ்க் கட்சிகளுடன் நடாத்திய பேச்சுக்களின்போது ஜனாதிபதி சந்திரிகாவும் இரு சிரேஷ்ட அமைச்சர்களும் பங்குபற்றியபோதும் கடந்த 12 வருடங்களுக்குமேலாக நடைபெற்றுவரும் யுத்தத்தை நிறுத்தவும், 40,000 தமிழர் உயிரிழக்கக் காரணமான பிரச்னையை தீர்க்கவும் விடுதலைப் புலிகளை சந்திக்க யாழ்சென்ற குழு எப்படிப்பட்ட குழு என்பது எல்லோர்க்கும் தெரிந்ததே.

சந்திரிகா தனது கட்டிடக் கலைஞரையும், தனது கிளாக்கையும், தனது வங்கியாளரையுமே அங்கு அனுப்பினர், அவர் தனது சமையல்காரரை மட்டும் யாழ்ப்பாணம் அனுப்ப மறந்துவிட்டார்போலும

நாடாளுமன்றில் தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறவே அவர்களுடனான சந்திப்பிற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தும் புலிகளுடனான சந்திப்பிற்கு இப்படியொரு குழுவை அனுப்பியதாகவும் 'சண்டே லீடர்' மேலும் தெரிவித்துள்ளது. சி

# தபால்களை சேர்க்கவும்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து 27-ம் திகதி சனிக்கிழமை திருகோணமலை செல்லும் 'சீ டால்சா' கப்பலில தபால்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளன,

இதற்கமைய தபால்களை பொதுமக்கள் எதிர்வரும் 27ம் திகதிக்கு முன்னர் தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ் பிரதம தபாலதிபர் திரு. சு கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார். 170-சி

# ராஜீவ் கொலை பற்றிய விசாரணைகளின் பொறுப்பு சிதம்பரத்திடம் ஒப்படைப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை சம்பந்தமான அனைத்து விசாரணைகளின் பொறுப்புக்களும் மத்திய வர்த்தக அமைச்சர் பா. சிதம்பரத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது.

பிரதமர் பி. வி. நரசிம்மராவின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா மேற்படி பொறுப்பை அமைச்சர் சிதம்பரத்திடம் ஒப்படைத்தார்.

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கை விசாரணை செய்து வரும் நீதிபரசர் ஜே. எஸ். வர்மா நீதியரசர் எல். சி. ஜெயின் ஆகியோரின் விசாரணைகளின் முடிவுகளையும் கவனிக்கும்படி அமைச்சர் பா. சிதம்பரம் பணிக்கப்பட்டுள்ளார்.

-வி-சி

# மந்திகை ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் பிரெஞ் வைத்தியக்குழுவின் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சந்திரோ எதிர்வரும் 27-ம் திகதி தமது தாயகம் பிரயாணமாகின்றார். இதனால் சத்திர சிகிச்சைப் பிரிவு தற்காலிக இடை நிறுத்தப்படவுள்ளது.

இதனால் இம்மாதம் 27-ம், 29ம், 30-ம் திகதிகளில் இவ் வைத்தியசாலையில் நடைபெறவிருந்த சத்திர சிகிச்சைகள் நடைபெறமாட்டாதென பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

# 3 மேஜர் ஜெனரல்கள் ஓய்வு பெறுகின்றனர்

(கொழும்பு)

இராணுவத்திலுள்ள மூன்று மேஜர் ஜெனரல்கள் அடுத்த மாதம் ஓய்வுபெறவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மேஜர் ஜெனரல்களான லக்கி அல்கம, வஜிரா விஜயரத்ன, சிவா சண்முகநாதன் ஆகியோர் அடுத்த மாதம் ஓய்வுபெறவுள்ளனர். இவர்கள் ஓய்வுபெற அனுமதிக்கப்படவுள்ளதாகவும் இவர்களின் சேவை நீடிக்கப்படாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை பிரிகேடியர்களான கருணதிலக, நளின் அங்கமன, சிறிபீரிஸ் ஆகியோர் ஜெனரல்களாக பதவி உயர்வு பெறவுள்ளனராம்.

-சி

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாணவர் எழுச்சிநாள் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ப. நோ. கூ. சங்கம், சனசமூக நிலையம் வர்த்தகர் சங்கம், விளையாட்டுக் கழகம், ஆசிரியர் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம், பேக்கரி உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவர், செயலாளர் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சி

# வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தவர் சுடப்பட்டார்

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனின் உத்தியோக பூர்வ மாளிகையான வெள்ளை மாளிகையில் வெளியார் ஒருவர் மூன்றாவது தடவையாக மதிலேறிக் குதித்த போது அவ சுடடுப்படுகாயப் படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது. ஜனாதிபதி பில் கிளின்டனும் அவரது மனைவியும் வெள்ளை மாளிகையில் இருந்த போதிலும் அவர்களுக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லையென்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

மதிலேறிக் குதித்தவர் 37 வயதான வில்லியம் ஒமோயாஸ்கி என்று அடையாளம் காணப்பட்டது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலும் இந்த நபர் கடுங்காவல்களை மீறி வெள்ளை மாளிகையின் சுற்று மதிலை ஏறிக் குதித்துள்ளார்.

வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்த போது இவர் கடுங்காயங்களுக்குள்ளானார்.

க-ம-சி

## ஏவுகணை

[1ம் பக்கத்தொடர்ச்சி]

திருமலை செல்ல மறுப்புத் தெரிவித்து வருகின்றனராம்.

இதனால் மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதியின் ஆணைக்குழு நியமிக்கப்பட்டும் விசாரணை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது

-சி

## இன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளன.

இதனுடன் கனரக ஆயுதங்கள், எறிகணைகள், மிதிவெடிகள், அண்மையில் விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானத்தின் பாகங்கள், வரலாற்று புகைப்படங்கள் என்பனவும் மக்களின் பார்வைக்கு முற்ற வெளி மைதானத்தில் இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வைக்கப்படும்"

-சி

## அலரிமாளிகையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களை இவ்வாறு கைதுசெய்யபட்டு கொள்ளுப்பிட்டி பொலிசில் ஒப்படைக்கபபட்டுள்ளனர்,

அலரி மாளிகையில் பாதுகாப்பு கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிளிடம், படம் பிடிப்பதற்கு அனுமதி கேட்டபோது அவர்கள் இந்த இரு பத்திரிகையாளர்களையும் கைதுசெய்து பொலிஸில் ஒப்படைத்ததாக 'ஹிரு' பத்திரிகை ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்,

விடுதலைப்புலிகள் தம்மிடமுள்ள விமானங்கள் மூலம் அலரிமாளிகையில் தாக்குதல் நடாத்தலாமென எச்சரிக்கப்பட்டதையடுத்து அலரிமாளிகையின் மேல் 50 ரக விமான எதிர்ப்பு ஏவுகணை பொருத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.